MAY 2024 **P/ID 35314/PTL1D**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. தமிழ்விடு தூது – குறிப்பு வரைக.

2. வருகுலம் ஓர் ஐந்தாய் வந்தாய் – பொருளுரைக்க.

3. தூது இலக்கியத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

4. இளைய பள்ளியை அறிமுகப்படுத்துக.

5. வடிவழகக் குடும்பன் யார்?

6. குறவஞ்சி – பொருளுரைக்க.

7. வசந்தவல்லி நிலவைப் பழிக்கக் காரணம் என்ன?

8. கலம்பகம் என்றால் என்ன?

9. நந்திக் கலம்பகம் தோன்றிமைக்கான காரணத்தைக் கூறுக.

10. கலிங்கத்துப்பரணியில் யார் யாருக்கிடையே போர் நடந்தது?

11. பரணி – பெயர்க் காரணம் கூறுக.

12. களம் பாடியதன் நோக்கம் என்ன?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

13. தமிழ்மொழியின் பிறப்பினைத் தமிழ்விடுதூதின் வழிநின்று விளம்புக.

14. தலைவி தமிழைத் தவிர வேறு பொருட்களை ஏன் தூதுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கவில்லை? விளக்கம் தருக.

15. வடகரை நாட்டின் வளத்தினை எடுத்துரைக்க.

16. பள்ளு இலக்கியத்தில் காணப்பெறும் நெல் வகைகளை எழுதுக.

17. வசந்தவல்லியின் பந்தாட்டச் சிறப்பினை எடுத்தியம்புக.

18. நந்திவர்மனின் கொடைச் சிறப்பை விளக்குக.

19. கலிங்க நாட்டை வென்றதன் பொருட்டு கருணாகரன் கொண்டு வந்த பொருட்களைப் பட்டியலிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை தருக.

20. தூது இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

21. மூத்த பள்ளிக்கும் – இளைய பள்ளிக்கும் இடையே நடந்த உரையாடலைத் தொகுத்துரைக்க.

22. குற்றாலக் குறவஞ்சியின் கவிநயத்தைச் சான்றுடன் விவரி.

23. நந்திக்கலம்பகத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

24. கலிங்கத்துப் பரணியின் தனித்தன்மைகளை ஆய்க.

———————